1987 ஏப்ரல் 28] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

பணிகள் நடைபெற்று வருகின்றன. 6 மாத காலத்திற்குள் பணியினை முடித்து துணை நிலையத்தினை இயக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அய்யம்பேட்டை துணை மின் நிலையம் அமைக்கப்படாததால் சுற்றுப்புற கிராமங்களில் விவசாயம் மற்றும் இதர பணிகளுக்காக மின்சார இணைப்புகள் வழங்க முடியாத நிலை இல்லை. மேற்கண்ட பணிகளுக்கு மின் இணைப்புகள் மற்ற இடங்களில் வழங்குவது போல் வழங்கப்பட்டுகின்றன.

(ஐ) வட ஆற்காடு மாவட்டம் தெக்குப்பட்டியிலுள்ள சந்தன மரப் பொருட்கள் தொழிற்சாலை பராமரிப்புப் பணிகள்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வட ஆற்காடு மாவட்டம், தெக்குப்பட்டில் அமைந்துள்ள சந்தன எண்ணெய் தொழிற்சாலை 31—1—1987 முதல் மூடப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின்கீழ் இயங்கி வரும் வடாற்காடு மாவட்டம் தெக்குப்பட்டு கிராமத்தில் உள்ள சந்தன மரப்பொருட்கள் தொழிற்சாலை 31—3—1987 முதல் மூடப்படவில்லை. ஆனால், இத்தொழிற்சாலையில் வருடாந்திர பராமரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

2. 1—12—1984 முதல் இதுவரை உற்பத்தி செய்யப்பட்ட சந்தன எண்ணெயின் அளவு 9 டன்களாகும். அதில் 31—3—1987 அன்று கையிருப்பில் உள்ள சந்தன எண்ணெய் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள 5 டன்களாகும். சந்தன மரத்தின் மார்க்கெட் விலை உயர்ந்துவிட்டது. ஆனால், அதற்கேற்ப சந்தையில் சந்தன எண்ணெயின் விற்பனை விலைக்கு உயரவில்லை. எனவே, அப்போதிருந்த மார்க்கெட் விலைக்கு சந்தன

எண்ணெயை விற்றால், அடக்க விலைக்கும் குறைவாக விற்று, நட்டம் அடைய நேரிடும். எனவே, கீழ்க்கண்ட சூழ்நிலை ஏற்பட ஆரம்பித்த உடனே, சந்தன எண்ணெய் உற்பத்தி மீண்டும் தொடஙகப்படும்:—

(அ) பராமரிப்புப் பணிகள் முடிக்கப்படுதலும்;

(ஆ) கைவசமுள்ள சந்தன எண்ணெயில் 50 சதவீதம் விற்பனையானதும்;

(இ) சந்தன எண்ணெய் விற்பனை விலையில் முன்னேற்றம் ஏற்பட்ட உடன்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையில் இத்தொழிற்சாலையில் வருடாந்திரப் பராமரிப்பு வேலைகள் நடைபெற்று வந்திருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மையில் வருடாந்திர பராமரிப்புப் பணி நடைபெற வில்லை. அந்த சந்தன எண்ணெய் தொழிற்சாலையில் 6 கன்டென்சர்கள் பாதிக்கப்பட்டு பழுதடைந்து விட்டிருக்கின்றன. உப்பு நீரைப் பயன்படுத்தியதன் காரணமாக அப்படிப் பட்ட நிலை ஏற்பட்டுவிட்டது. அதை முழுமையாக மாற்றினால்தான் தொழிற்சாலை தொடர்ந்து நடைபெறும். அதுவும் நல்ல நீரைக் கொண்டு வருவதற்கு வழி செய்யவேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுவதற்கு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வீ. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது முற்றிலும் உண்மை, அங்கே கட்டுமானப் பணி செய்த டான்சி நிறுவனம் சரியாகச் செய்யாததனாலே அதற்குத் தரமான தண்ணீரும், போதுமான தண்ணீரும், கிடைக்கவில்லை. அதைத் திருத்துவதற்கு, நவீன மயமாக்குவதற்கு டெண்டர் விடப்பட்டிருக்கிறது. அடுத்த மாதம் 12-ம் தேதி கடைசி தேதியாகும்.

1987 ஏப்ரல் 28]

திரு. கி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு சந்தன எண்ணெய் உற்பத்தி மீண்டும் துவங்க, ஏற்கெனவே அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை தர அரசு நடவடிக்கை எடுக்குமா? அங்கு 37 என்.எம்.ஆர். தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்களே, அவர்களுக்கு வேலை தரப்படுமா? சந்தன எண்ணெய் உற்பத்தியில் நஷ்டம் ஏற்படாமல் இருப்பதற்காக அரசு தனியாக ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்தத் தொழிற்சாலையில் கைவசம் உள்ள சந்தன எண்ணெயின் மதிப்பு 1 கோடி ரூபாயாகும். ஆனால் உற்பத்தி விலையை விட இதற்கான மார்க்கெட் விலை குறைவு. ஆனால் சந்தன கட்டையின் விலையோ எண்ணெயின் விலையை விட அதிகம். இதற்குக் காரணம் இன்றைக்கு சுமார் 3, 4 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சந்தன எண்ணெய், சந்தன கட்டைகளைக் கடத்துவதின் மூலமாக வேறு மாநிலங்களில் தயாரிப்பதாகத் தெரிய வருகிறது. சந்தனக்கட்டைகளைக் குறிப்பிட்ட அளவுக்கு மேல் வைத்திருப்பது குற்றம் என்பதற்கான சட்டம் இல்லை. அதனால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து மத்திய அரசின் காட்டு இலாகாவுக்கு குறிப்பிட்ட அளவுக்கு மேல் சந்தன எண்ணெய் வைத்திருந்தால் அது குற்றம் என்றும், ஏற்றுமதி செய்தவர்கள் எங்கிருந்து ஏற்றுமதி செய்தார்கள் என்பதை எல்லாம் கண்டறிந்து அதுபற்றி சட்டமியற்ற வேண்டுமென்றும் கடிதம் எழுத இருக்கிறோம்.

(ஒ) சேலம் மாவட்டம், மோளப்பாறையில் கொத்தடிமை குடும்பங்களின் நலனுக்கென அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. கே. அன்பழகன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் சார்பாக அந்தப் பொருள் குறித்து திரு. ஜெ. ராஜாபாபு அவர்கள் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருவார்.